37

No. M. 1630. NOVEMBER 1922.

சுயம்பிரகாசத் துணை.

# ஞானசூரியன்

இது ஒரு சிறந்த மாதாந்த தமிழ்ப் பத்திரிகை.

# GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.

மலர் 1 } துந்துபி-௵ கார்த்திகை-௴ 1௳ { இதழ் 8
1922௵ நவம்பர்-௴ 16௳

Vol. 1 — No. 8

பொருளடக்கம்.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| கடவுள் வணக்கம் | 169 |
| சீடரிலக்கணம்—வேதாந்தபாஸ்கரன் | 170 |
| ஆசிரியரிலக்கணம்—வேதாந்தபாஸ்கரன் | 174 |
| சங்கீதம்—ஞானக்களஞ்சியம் | 177 |
| உயிர்ப்பிராணிகள் மகாநாடு—காரைச்சிவனடியார் பிரசுரம் | 180 |
| பிள்ளையார்சுழி—V. K. மூர்த்தி, விளமல் | 183 |
| தமிழ்—R. S. சாம்பசிவசர்மன் | 187 |
| வருணதருமவிளக்கம்—விளமல் சேஷாத்திரி | 190 |


இப்பத்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

## "ஞான சூரியன்"

### சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன்முதலிய இடங்களுக்கு | வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட | ரூ 1—8—0 |
| பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு | | ரூ 2—0—0 |
| தனி சஞ்சிகை விலை | | ரூ 0—3—0 |

மாதிரிப் பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனமாக அனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி. பி, யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலா மேனும முன் பணம் அனுப்பி விடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்தால் ரூ 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அதனால் தங்களுக்கு 3 அணா சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள், சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

---

### விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒருமாசத்திற்கு | ... | ரூபா | 8—0—0 |
| அரை பக்கத்திற்கு | ,, | ,, | 5—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 3—0—0 |

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு $12\frac{1}{2}$ ரூ வீதம் கழித்து வாங்கப்படும். எப்போதும் முழுத்தொகையை முன்பணமாயனுப்பவேண்டும்.

---

### விஷயங்கள்.

. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லா.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு,

பத்திராதிபர்.

ஸ்ரீ கருணையானந்த மஸ்தான் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியதும் மனிதராகப்பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டிய யோக ஞான உபதேசசாஸ்திரமுமாகிய யோகரகசியம்

முழுப்புத்தகம் 1-க்கு ரூ 2—0—0.

கருணையானந்த மஸ்தான் சுவாமிகள்
பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசத் துணை.

# ஞானசூரியன்.

இது ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தற்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 1.] துந்துபி௵ கார்த்திகை௴ 1௨. [இதழ் 8.

## கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
நானிலத் துதித்தமா ணிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத்
தன்மை நாமம்
ஏதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவறநின்
றியக்கஞ் செய்யும்
சோதியைமாத் தூவெளியை மனதவிழ நிறைவான
துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே நினைவாகச்
சிந்தை செய்வாம்.

(தாயுமான வள்ளல்)

## சீடரிலக்கணம்.

சீடன், மாணுக்கன் என்பன ஒருபொருட் பலபெயர்.

மாணுக்கர்கள்:—உத்தம மாணுக்கர், மத்திம மாணுக்கர், அதமமாணுக்கர் என மூவகைப்படும்.

உத்தம மாணுக்கன்:—இவனே முதன்மாணுக்கன். இவன் அன்னப் பட்சியையும், பசுவையும், சிப்பியையும், கொக்கையும், இரும்பு நீரையும், மின்னலிற் பொருள் பார்ப்போனையும் நிகர்த்தவன்.

அன்னப்பட்சியானது, பாலுடன் கலந்த நீரைப் பிரித்துவிட்டுப் பாலைமாத்திரம் பருகும். அதுபோல் ஆசிரியரிடத்தினுள்ள நற்குணம், நற்செய்கை, தீக்குணம், தீச்செய்கை இவைகளில் தீக்குணம், தீச்செய்கைகளைப்பற்றி இகழாமல், நற்குண நற்செய்கைகளுக்காக மட்டும் புகழ்வான். அன்றியும், அவர் வாக்கியத்திலுள்ள சரிதாதிகளை நீக்கி, ஞானமொழியை மட்டும் எடுத்துக்கொள்வான்.

பசுவானது, அதிகமான புல்லுள்ள விடத்தைக் கண்டால் வயிறு நிரம்ப மேய்ந்து, பின்பு ஓரிடத்தில் படுத்துக்கொண்டு சிறிது சிறிதாக வாயில் வருவித்து மென்றுதின்று சீரணப்படுத்தும். அதுபோல் ஞானசிரியரிடத்திற் கேட்ட உபதேசத்தை ஓர் ஏகாந்தமான விடத்திலிருந்து சிந்தித்து நிட்டை கூடுவான்.

சிப்பியானது, சோதி மழைக்கு அங்காந்திருந்து, துளி விழுந்தமாத்திரத்தில் அகட்டை மூடிக்கொள்ளும். அதுபோல் ஆசிரியர் எப்போது கூறுவார்? என இதயமலர்ந்து எதிர்பார்த்திருந்துக் கேட்டு, அவ்வாக்கியப்பொருளை அகத்தில் அடக்கிச் சிந்தித்துணர்வான்.

கொக்கானது, நீர்த்துறையினிடத்தும் மடைவாயலினிடத்தும் அசைவறநின்று, மீன்வந்துழி ஒரே கொத்தில் கவர்ந்து புசிக்கும். அதுபோல் சித்திரப் பாவைபோன்று அசைவற

இருந்து, பயன்தரும் வசனங்கள் வருந்தோறும் கவனமாகக் கொள்ளுவான். இதுபற்றியே,

சச்சிதானந்தமாலை.

மடைவாயிற்பட்சிபோல் நடைபார்த்திராமலே
மற்றென்ன கற்றறிவையோ, எனவும்

மூதுரை.

மடைத்தலையில் ஓடுமீன்ஓடி யுறுமீன்வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு, எனவும்

திருக்குறள்.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து, எனவும்

கூறியிருக்கின்றன.

காய்ந்த இரும்பானது, தனக்கு வேண்டிய நீரைப் பருகி, அதனைத் திரும்ப வெளியில்விடாது. அதுபோல் தமக்குவேண்டிய உபதேசமொழிகளை யேற்றுக்கொண்டு மறவாதிருப்பது மன்றி, வெளியில் பிதற்றுதலுஞ் செய்யான்.

இருண்டு மழைபெய்யும் மின்னற்காலத்தில், தீபமில்லாத போது ஒருபொருளை இன்னதென்று பார்க்க விரும்பியவன், அந்த மின்னல் ஒளியில் கூர்மையாக விரைந்து நோக்குவான். அதுபோல் அதிசீக்கிரத்தில் கூறிய குருவாக்கியத்தின் பொருட்களை உடனே யறிந்துகொள்ளுவான்.

மத்திம மாணாக்கன்:—இவனே இடைமாணாக்கன். இவன் உழுகிற நிலத்துக்குச் சமானமானவன். உழுநிலமானது, உழவர் வருந்திப் பயிர்செய்யும் முயற்சிக்குத் தக்கவாறு விளைவைத் தரும். அதுபோல் ஞானசிரியர் சீடன் சமீபத்திலிருந்துகொண்டு எவ்வளவுக்கு இகழ்ந்துபேசி ஆத்தும விசாரம் உண்டாக்குகின்றாரோ? அவ்வளவுக்கு (நிர்ப்பந்தத்திற்காக) சிறிது சிறிது அநுஷ்டிப்பான்.

அதம மாணுக்கன்:—இவனே கடைமாணுக்கன். இவன் பன்ணுடையையும், வெள்ளாட்டையும், எருமையையும், பல துவாரமுள்ள இல்லிக்குடத்தையும், உண்ணியையும், மாத்துண்டையும், சரீரத்தையும் நிகர்த்தவன்.

பன்ணுடையானது, நெய், தேன் முதலியவைகளை வடிக்கட்டுதற் பொருட்டுத் தன்மேல் வார்க்கும்போது, மதுரமான சாரத்தைக் கீழே ஒழுகவிட்டுச் சாரமற்ற கசட்டையே தன்னிடத்தில் தங்கச்செய்யும். அதுபோல்,ஆசிரியர் திருவாயிலிருந்து வந்த உசிதமான சம்பாஷணையை மறந்துவிட்டு அநுசிதமான சம்பாஷணையையே சிந்தித்துக் கொண்டிருப்பான்.

வெள்ளாடானது, ஒரு செடியிலேயே தன் வயிறு நிரம்பும்படி தழை நிரம்பியிருக்கப் பெற்றும், அதனை வயிறுநிரம்ப மேயாமல் "கன்று மனத்துடனுடு தழை தின்றாற்போல்" என்னும் தாயுமானவர் வாக்கியம்போல பல செடிகளிலுஞ் சென்று சிறிதுசிறிது தின்று வயிறு நிரம்பாமல் அலையும். அதுபோல் தான் இரண்டறக் கலத்தலாகிய பிரம்மஞானம் அடைவதற்குண்டான தவநெறிகள் ஒரே ஆசிரியரிடத்திற் காணப்பெறினும், அவரிடத்திற் சிற்சில விஷயங்களைக் கேட்ட மாத்திரத்திலேயே அவரிடத்தை நீங்கிப் பல ஆசிரியர்களிடத்திலும் அலைந்து, உண்மையை அறியாமல் மயங்கித் திரிவான்.

எருமையானது, தெளிந்த நீரைக் கலக்கி அதன் பின்னரே பருகுவதுபோல, ஞானசிரியர் இதயத்தை மகிழும்படிச் செய்து அவரால் உபதேசிக்கப்பெறும் ஞானமிர்தத்தைத் தெளிவுபெற வுண்ணுமல், அவர் சித்தத்தைத் தனது விபரீதவினவாற் கலக்கி அவர் மனவருந்திக் கூறுஞ் சிற்சில மொழிகளைச் செவிவாயினுல் உண்பான்.

பல துவாரங்களையுடைய இல்லிக்குடமானது, தன்னுள் வார்க்கும் நீரைப் புறத்தில் ஒழுகவிட்டு நிரம்பாமல் இருப்பது போன்று, ஆசிரியர் இரவும் பகலுமாக ஞானமிருதத்தைப் பல

திருட்டாந்த தார்ட்டாந்தங்களைக் கொண்டுப்பலகாற் புகட்டினும், புகட்டும் அக்கணத்திற்றானே அந்த வாக்கியாமிருதத்தை மறந்துவிடுவான்.

உண்ணியானது, பசுவின் முலைக்காம்பின் பால்வரும் துவாரத்திற் கடித்துக் கொண்டிருந்தும், பரிசுத்தமும், மதுரமும் பொருந்திய அந்தப் பாலையுண்ண வகைதெரியாமல், அசுத்தமாயும் துர்க்கந்தமாயு மிருக்கின்ற அப்பசுவின் இரத்தத்தைப் பருகி ஆனந்தம் அடையும். அதுபோல் ஆசிரியர் வாக்கியத்தின் ஞானாமிருதம் சுரந்து பெருகிவராநின்ற அர்த்தத்தில் அழுந்திச் சுகாநந்தம் பெறாமல், அனர்த்தத்தையே பொருளாகக்கொள்வான்.

உலர்ந்த மரத்துண்டைப் பல மனிதர்கள்கூடி நீரிற் பூமி மட்டத்திற்கு அழுத்தினாலும், அவர்கள் கையை விட்டவுடன் கனவேகமாய்க் கிளம்பி நீர்மட்டத்திற்கு வந்துவிடும். அதுபோல் ஆசிரியர் மாணாக்கன் அறிவைப் பற்பலசாத்திர உவமான உபமேயங்களின் ஆதாரவைக்கொண்டு ஞானானந்த சமுத்திரத்தில் முழுகச்செய்பினும், அவர் போதனை நீங்கிய அக்கணத்திற்றானே விடய இச்சையாற் பகிர் முகத்தாராய்ச்சியிற் சிக்கி வருந்துவான்,

சரீரமானதைப் பலவிதமான சுகந்தப்பொடி சந்தனமுதலிய களபகஸ்தூரிகளாற் பரிமளிக்கச்செய்து, திவ்வியமான வாசனைநீரில் ஸ்நானம்செய்து பரிசுத்தப்படுத்தி வைக்கப்பெற்றாலும், மீண்டும் வேர்வையாதிகளால் துர்க்கந்தம் வீசும். அதுபோல் ஆசிரியர் சீடன் மனத்தை ஞானோபதேசத்தாற் பல தடவைகளிலும் சுத்தப்படுத்தி உபதேசஞ்செய்தாலும்,

ஒரு உபாத்தியாயர் ஒரு மாணாக்கனுக்குப் பாடஞ் சொல்லிக்கொடுத்து முடிந்தபின்னர், பையா! நான் சொன்னவையெல்லாம் உன் செவியில் நுழைந்ததா? என்க, அதற்குப் பையன் பாடஞ் சொல்லும்போது பக்கத்திலிருந்த வளையில் ஒரு எலி

நுழைவதைப் பார்த்துக்கொண்டே யிருந்தபடியால், உபாத்தியாயர் எலியைப் பற்றித் தான் கேட்கிறார் எனக்கருதி, எல்லாம் நுழைந்தது வால்மாத்திரம் நுழையவில்லை யென்றான் என்னுங் கதைபோல், ஞானசிரியர் உபதேசங் கூறும்போது அதைக் கவனிக்காமல் வேறொன்றிற் பராக்காக இருந்துவிட்டு மீண்டும் மும்மலாதிகளின் விடய தர்க்கந்தத்திற் பொருந்தி வருந்துவான்.

(இன்னும் வரும்)

(வேதாந்த பாஸ்கரன்.)

---

## ஆசிரியரிலக்கணம்.

(150-ம் பக்கத் தொடர்ச்சி.)

சிலநாட்கள் சென்றபின், சில முதியோர்கள் மூலமாய் அழகுசுந்தரம் அய்யருக்குத் தனது புத்திரியைப் பாணிக்கிரகணம் செய்துகொடுப்பதாகவும், சகல செலவும் தானே செய்துகொள்வதாகவும், வரதட்சணை ஐயாயிரம் (5000) ரூபாய் எனவும் தீர்மானித்து ஓர் சுபதினத்தில் விவாகச் சடங்கை நிறைவேற்றினர். மணமகன் மணமகளுடன் வெகுகாலம் மாதுலன் வீட்டிலேயே வசித்து வந்தனன். ஆனால், அவ்வளவு காலம் வரையில் ஒரு புஸ்தகத்தைப் படிக்கவாவது ஏதாவதொன்றை யெழுதவாவது ஒருவருங் காணாததால், இவன் கல்விமானா? அல்லது முட்டாளா? என்கிற சந்தேகம் பிறந்துவிட்டது. அதைத் தனது புத்திரி சானகியின் மூலமாய் நிவர்த்திபண்ணிக்கொள்ளப் பலவாய் முயன்றும் (அழகுசுந்தரம் நிரட்சரக்குச்சி யெனினும் சாமர்த்தியவான் ஆதலால்) உண்மை விளங்காமற் போய் விட்டது. அதன்மேல், சில கல்விமான்களை அனுப்பி, தனது மருமகனுடைய கல்வித்திறமை இத்தன்மைத்தென அறிந்து வாருங்கள் எனப்பணித்தனன். அவ்வாறே, கல்விமான்கள் சென்று அழகுசுந்தர மய்யரைக்கண்டு, வெகுநேரம் வரையில் உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, அதன்பின் சில சந்தேகங்களைத் தங்களிடம் நிவர்த்திபண்ண வந்தோம் என்றனர்.

அழகுசுந்தரம் அவர்களை நோக்கி, அப்படியா! நிரம்பச் சரி, ஆனால் நீங்கள் தெரிந்தவர்களா? தெரியாதவர்களா? என்று கேட்க, அதற்குக் கல்விமான்கள் (நாம் அவரிடம் கேட்டுக்கொள்வதாகச் சொல்லியதால்) நாங்கள் தெரியாதவர்கள்தான் என்று சொல்ல, ஆனால் ஒரு சிறியகதை சொல்கிறேன் கேளுங்கள்.

ஒரு மந்திரவாதி ஆற்றுவெள்ளத்தில் மிதந்து குற்றுயிரோடு போகும்போது, நமக்குத் தெரிந்த மந்திரங்களெல்லாம் நம்மோடு அநியாயமாய்ப் போகின்றனவே! இவற்றை யாருக்காவது சொல்லிவைத்தாலும் பிரயோசனமாகுமே! என்றெண்ணி, அவ்வாற்றங்கரையில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த ஓர் இடையனைக்கண்டு, என்னைக் காப்பாற்றினால் உனக்கொரு பெரிய உபகாரம் செய்கிறேன் என்று சத்தமிட்டான். அதை அவ்விடையன் கேட்டுத் தனது கரத்திலிருந்த ஆடுமேய்க்கும் நீண்ட மூங்கிற்கோலை அவனுக்கு நீட்டினான். அதை மந்திரவாதி பிடித்துக்கொண்டு கேட்கிறான்.

ஓ! கோனாரே! நீர் படித்திருக்கிறீரா? என்று கேட்டான். அதற்கு இடையன், படிப்பு என்றால் பலம் என்ன விலை? அதை எங்கே வாங்குகிறது? என்றான். அதைக்கேட்ட மந்திரவாதி, இவனோடு மாரடித்துக் கற்றுக்கொடுக்க முடியாமல் நமது வாக்குப் பொய்யாய்ப் போவதினும், சத்தியத்தைக் காப்பாற்றிக்கொண்டு இவ்வாற்றில் இறந்துபோவதே மேலானதென்று கோலைக் கைவிட்டு வெள்ளத்தோடுபோய் இறந்தான் என ஆன்றோர்கள் சொல்வது கர்னபரம்பரை. ஆதலின் தெரியாதவர்களாகிய உங்களுக்குச் சந்தேகம் நிவர்த்திபண்ண முடியாதென்று சொல்லி எழுந்து வீட்டுக்குள் போய்விட்டான்.

மறுநாள் அந்தக் கல்விமான்கள் ஒன்று சேர்ந்து, இன்றைக்கு நாம் தெரிந்தவர்கள் என்று சொல்வோம் எனத் தீர்மானித்துப்போய் அழகுசுந்தரம் அய்யரைக் கண்டு கேட்டார்கள். அதற்கு அழகுசுந்தரம், தெரிந்தவர்களுக்கு ஏன் சந்தேகம் வரும்? என்று எழுந்து வீட்டுக்குள் போய்விட்டான்.

மறுநாள் சிலர் தெரிந்தவர்களென்றும் சிலர் தெரியாதவர்களென்றும் இருபகுதியாக ஏற்படுத்திக்கொண்டு சென்று கேட்டார்கள். அதற்கு தெரியாதவர்களுக்குத் தெரிந்தவர்கள் சொல்லுங்கள் என்று சொல்லி, அழகுசுந்தரம் எழுந்து வீட்டுக்குள் போய்விட்டான்.

அதனால் கல்விமான்கள், அவனுடைய உண்மையைக் கண்டு பிடிக்க முடியாமற் போய்விட்டது. அழகுசுந்தரம் படிக்காதவனாயிருந்ததனால் அல்லவா? சாமர்த்தியமாக ஏதோ ஒன்றைச் சொல்லிவிட்டுப் போய்விட்டான். படித்தவனாக இருந்தால் அந்தக் கல்விமான்களிடம் கலந்துபேசி யிருப்பானல்லவா? அதுபோல், ஞானமில்லாத வேடதாரிகளின் ஆடம்பரத்தைக் கண்டு மயங்கி உபதேசம் கேட்டால், அவர்களுக்கு ஒன்றுந் தெரியாததால், ஏதாவது சமயத்திற் கேற்றபடி வாய்க்கு வந்ததை உளறிவிட்டுப் பணம்பறித்துக்கொண்டு போவார்களேயன்றி, காரியத்தில் ஒன்றுமிராது.

ஒரு ஊரில் ஒரு குரு இருந்தார். அவருக்கு நால்வர் சிஷ்ர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் குருவுக்குச் சமையல் பண்ணுவான். ஒருவன் வேட்டிதோய்த்துக் காயப்போட்டுக் கட்டிக்கொள்ளக் கொண்டுவந்து கொடுப்பான். ஒருவன் பூசைக்குப் புட்பம் கொண்டுவருகிறது, சந்தனம் அரைக்கிறது முதலிய வேலைகளைச் செய்வான். ஒருவன் கைகால் பிடிப்பான்.

இப்படி அவர்கள் பணிவிடைசெய்துகொண்டு வருகையில், ஒருநாள் குருவின் வஸ்திரம் கொஞ்சம் கிழிந்துபோயிற்று. அப்பொழுது அவர் சீடர்களை அழைத்து, இதற்கு என்னசெய்யலாம்? என்று கேட்டார். அதற்குச் சீடர்கள், ஒரு ஊசிகொடுத்தால் நாங்கள் தைத்துப்போடுகிறோம் என்றார்கள். அதற்குக் குரு, ஊசி எங்கே கிடைக்கும்? என்றார். சீடர்கள், உத்தரவு கொடுத்தால் நாங்கள் சந்தைக்குப்போய் வாங்கிவருகிறோம் என்றார்கள். அதுகேட்டுக் குரு, தாம் வெகுநாளாய்ச் சேர்த்து வைத்திருந்த ஒரு ரூபாயை எடுத்துக் கொடுத்து, ஊசி வாங்கிக் கொண்டு வாருங்கள் என்றார்.

அந்த ரூபாயை வாங்கிக்கொண்டு நால்வரும் சந்தைக்குப் போய், ஊசிக்காகக் கடைகடையாய்ச் சுற்றுகையில், ஒரு மோசக்காரன் அவர்களைத் தன் வீட்டுக்கு இட்டுக்கொண்டு போய், ஒரு ஊசியைக்கொடுத்து ரூபாயை வாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டான்.

(இன்னும் வரும்)

(வேதாந்த பாஸ்கரன்.)

## சங்கீதம்.

(159-ம் பக்கத் தொடர்ச்சி.)

பழுதிலாதசொன் மணியினைப் பத்திசெய்தன்பு
முழுதுமாகிய வடத்தினுன் முறைதொடுத்தலங்கல்
அழுதுசாத்துமெய் யன்பருக் ககமகிழ்ந்தையர்
வழுவிலாதபேர் மாணிக்கவாசக னென்றூர்.

சங்கீதமானது, விசாலம்பொருந்திய பூமிக்கும் பரிசுத்தம் பொருந்திய கங்காநதிப்பிரவாகத்திற்கும் சமானமானதே. பூமியில் நன்மையைத்தரும் வித்துக்களைப் பதித்தாலும் தீமையைத் தரும் வித்துக்களைப் பதித்தாலும், அவைகளுக்கு மாவுணவாகிய சாரத்தைக்கொடுத்து முளைக்கச்செய்கின்ற சுபாவம் பூமிக்கு உடையது. நதியின் சலத்தை எங்கெங்கு பாய்ச்சப்படுகிறதோ, அங்கங்குள்ள பயிர், செடி, கொடி, விருட்சம் முதலியவைகளை விருத்திசெய்யும் சுபாவம் சலத்திற்குடையது. அவ்விதமிருக்க, ஒருவனுடைய நல்ல நிலத்தில் எலுமிச்சை வைத்துப் பயிராக்குவதற்குப் பதிலாக எலுமிச்சம் பழத்தைப்போல் காய்க்கும் எட்டிமரத்தை வைத்துப் பயிர்செய்தாலும், ஆற்று சலத்தை கத்தரி, மிளகாய், கீரை முதலிய செடிகளுக்குப் பாய்ச்சவேண்டியதற்குப் பதிலாக விழல்முதலிய பற்பல வீணான புல்பூண்டுகளுக்கு முத்தலை யேற்றமிட்டு இறைத்துப் பாய்ச்சினாலும், அவை மனிதனுடைய குற்றமேயன்றி முறையே பூமியின் குற்றமும் ஆற்றுநீரின் குற்றமும் அன்று. அதுபோல் சங்கீதம் என்னும் அரிய பெரிய வித்தையைக்கற்ற ஒரு வித்துவான், அந்த இன்னிசையை நிட்காமிய மனத்துடன் பேரின்பச் செய்யுட்களில் சேர்த்துப்பாடி ஆனந்தபரவசமடைந்து, மனிதராகப்

பிறந்ததின் பயனாகிய கடவுளின் திருவடியைப்பெற்று உய்ய வேண்டுமென்று கருதாமல், அதைச் சிற்றின்பச் செய்யுட்களில் கலந்துபாடிப் படுகுழியை நாடி விலைமாதர்க்குப் பூமாலைசூடி, அவள் கேட்கும் பொருளுக்காகப் பலவிடங்களுக்கும் ஓடி கிடைக்காததால் மனம்வாடிச் சரீரம் மெலிந்துத் தள்ளாடி மரணாவஸ்தைப் படுகின்றனர். அந்தோ! என்ன பரிதாபம்!

சங்கீதமானது அடயோகம், இலயயோகம், இராசயோகம் என்னும் யோகத்திரயங்களுள் இரண்டாவதாகிய இலயயோகத்தினால் அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் பிரதிபலிக்கும் வண்ணம், அண்டமாகிய சரீரத்துள் ஆறுதார கமலங்களில் நான்காவது அநாகதச் சக்கரத்திலிருந்து உண்டாகும் மணி, சமுத்திரம், மேகம், மத்தளம், பேரிகை, வீணை, சிலம்பு, சங்கு, வண்டு, கைத்தாளம் என்னும் தசவிதப் பிரணவ நாதங்களின் அறிகுறியாக, பிண்டமாகிய இந்தப்பூமியில் பிரதிபிம்பம்போல் செய்ததும், பக்தி மார்க்கத்துக்குப் பற்றுக்கோடு போன்றதுமாகிய அருமையான வித்தை.

மகத்துவம் வாய்ந்த சங்கீதம் என்னும் வித்தையை, அடுப்பிலேற்றிய சோற்றுப்பானையின் சலமானது கொதிகிளம்பியவுடன் 'கதபுத, கதபுத' என்று கொதிப்பதுபோல் சில சங்கீத வித்துவான்கள், தெருக்களிலும், சந்துகளில் நடக்கும் போதும், மலோபாதை கழிக்கும்போதுங்கூட 'கமபத, நிதபம, மபதநி' என்று அதே பிரமையாகப் புலம்பித் திரிகிறார்கள். இவ்விதமாக இடபேதமின்றி எல்லாவிடங்களிலும் சுராவளிகள், சண்டை வரிசைகள், அலங்காரங்கள் முதலியவைகளை அப்பியாசித்துக்கொண்டும், சுரங்களுக்குத் தக்கவாறு அகார சாதகம் செய்துகொண்டும், தெருவில் போகும்போதே தப்பு, திப்பு என்று கையை மாற்றிமாற்றிச் சாணம் தட்டுவதுபோல் தாளங்களைப் போட்டுக்கொண்டு சஞ்சரிப்பதானது, சங்கீதத்தின் பெருமையைக் குறைக்கின்றதல்லவா? சங்கீதம் இன்ன காரணத்திற்காக ஏற்பட்டதென்று அதன் அருமை பெருமையை அறிந்

துணர்ந்த விவேகிகள்கூடிய நன்மையான இடங்களில் பாடாமல் கண்டவிடங்களில் எல்லாம் பாடினால், அதிக விவேகிகளும் சங்கீதம் என்பதே தெரியாதவர்களும், அப்படி பாடுபவனைச் சித்தப் பிரம்மையுடையவன் என்று எண்ணுவார்களே யன்றி, சங்கீத வித்துவான் என்று ஒருபோதும் எண்ணமாட்டார்கள்.

முன்னொருகாலத்தில் ஒருமாட்டிடையன் இலட்சம்வராகன் புதையல் அகப்பட்டு பாக்கியவனானன். ஒரு சங்கீத வித்துவான் அவனிடத்தில் போய்த் தக்க பரிசு பெறுவதற்காகக் கீர்த்தனைகள் பாடினான். பாடும்போது இசைக்குத் தக்கபடி,

திருவிளையாடற் புராணம்.

வயிறது குழியவாங்கல் அழுமுகங் காட்டல்வாங்குஞ்
செயிறு புருவமேறல் சிரநடுக் குறல்கண்ணுடல்
பயிறு மிடறுவீங்கல் பையென வாயங்காத்தல்
எயிறது காட்டலின்ன வுடற்றொழிற் குற்றமென்ப.

வெள்ளைகாகுளி கீழோசை வெடிகுரல் நாசியின்ன
எள்ளிய வெழாலின்குற்றம் எறிந்துகின் னிரட்டலெல்லை
தள்ளிய கழிபோக்கோசை யிழைத்தனெட் டுயிர்ப்புத்தள்ளித்
துள்ளலென் றின்னபாடற் றொழிற்குற்றம் பிறவுந்தீர்ந்தே.

கல்லாடம்.

விரல்நான் கமைத்த வணிகுரல் வீங்காது
நான்மறை துள்ளும் வாய்பிள வாது
காட்டியுள் ளுணர்த்தும் நோக்கம் ஆடாது
பிதுர்கனன் மணிசூழ் முடிநடுக் காது
வயிறுகுழி வாங்கி அழுமுகங் காட்டாது
நாசி காகுளி வெடிகுரல் வெள்ளை
பேசாக் கீழிசை யொருபுறம் ஓட்டல்
நெட்டுயிர்ப் பெறிதல் எறிந்துகின் னிரட்டல்
ஓசை இழைத்தல் கழிபோக் கென்னப்
பேசுறு குற்ற மசைவொடு மாற்றி.

இசைமரபுடையார்.

கண்ணிமையா கண்டம் துடியா தொடிறசையா
பண்ணளவும் வாய்தோன்றா பற்றெரியா—எண்ணிலிவை
கள்ளார் நறுந்தெரியற் கைதவனே கந்தருவர்
உள்ளாளப் பாட லுரை.

உள்ளாளம் விந்துவுடன் நாதம் ஒலியுருட்டுத்
தள்ளாத தூக்கெடுத்தல் தான்படுத்தல்—மெள்ளக்
கருதி நலிதல் கம்பித்தல் குடிலம்
ஒரு பதின்மே லொன்றென் றுணர்.

திருவேங்கட சதகம்.

புருவநெரியாமல் மணியெயிறு தோன்றமல் விழி
    புறளாமல் அங்க சேட்டை
புரியாமல்மிகு தலையை யசையாமல் மிடறுவாய்
    பொருமி விம்மாமல் இயல்பாய்ச்
சுருதிலயை சுரஞான நீதியொடு வீணையின்
    தொனியினு தப்பிரமாய்த்
துய்யதந் திரியோசை மிடறேசை யெனவேறு
    தோன்றமல் இன்ப மயமாய்
தருமதுர அமுதரசம் ஒழுகுசா ரிகள்பழகு
    சங்கீத வித்தை யென்றல்.

(இன்னும் வரும்)

(ஞானக்களஞ்சியம்)

## மனிதர் வாய்ப்படும் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாடு.

(162 - ம் பக்கத் தொடர்ச்சி.)

உலகம் உய்வதற்குக் காரணமான பசுக்களின் தலைவரான ஸ்ரீமதி காமதேனு நாச்சியார் கம்பீரமான நடைநடந்து பலத்த ஆரவாரத்தினிடையில் மேடையிலேறி "முன்னுள்ள பெரியார்களும் தேவர்களும் எம்பெருமானும் ஏழைகளாகிய எங்களிடத்துக் கிருபைகூர்ந்தெழுதி வைத்திருக்கிற நூல்களை யெடுத்து, வருஷத்தில் மூன்று மாதங்களுக்காவது மனிதர்களுக்கு நீங்கள் உபதேசித்து எங்கள் உயிரைக் காப்பாற்றிவர வேண்டுமென்று இந்தக் கூட்டம் மன்றடுகிறது" என்ற தீர்மானத்தைப் பிரேரணைசெய்து பேசியது பின்வருமாறு:—

அன்பர்களே! சில வருஷங்களுக்கு முன்னல் மனிதரிற் பலபேர் உண்மையறியாமல் பசுமாடுகளைக் கண்டபடி கொலை

புரிந்து வந்தார்கள். பசுவினாலே உலகம் அழியாமலிருக்கிறது. பசுவின் உடம்பில்தான் தேவர்களும் முனிவர்களும் எம்பெருமானும் சகல அண்டங்களும் சந்திர சூரியர்களும் வசிக்கிறார்கள். இதனைப் பலரும் அறியாமல் பசுக்களைத் துன்புறுத்தியும் அலட்சியப்படுத்தியும் வந்தார்கள். ஆனால் பெரிய பெரிய புராணிகர்களும் பெரிய மேதாவிகளும் வாக்சால முடையவர்களும் வெளிவந்து உண்மையையெடுத்து ஜனங்களுக்கு விளக்கிக்கூறி வந்ததன் பயனாக இப்போது பசுக்கொலை அநேகமாக நின்றிருக்கிறது. அப்படியே இப்போது புராணிகர்களும், மடாதிபதிகளும், மத சம்பந்தமான சங்கங்களும், பிரசங்கிகளும், சிவபக்தர்களும் இன்னும் இரக்கமுள்ள பெரியார்களும் பிரசாரம் செய்ய முன் வருவார்களானால் மிகச் சில வருஷங்களில் இவ்வநியாயக் கொலை தொலைந்து ஒழிந்துபோவதிற் சந்தேகமேயில்லை. ஆதலால் இந்தத் தீர்மானத்தை யங்கிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன் என்று பேசினார். மற்றுஞ் சிலரால் ஆமோதிக்கப்பெற்று அங்கீகரிக்கப் பெற்றது.

பின்னர் அக்கிராசனாதிபதியான ஆடப்பதேவர் எழுந்து, "கண்ணியமுள்ள சகோதரர்களே! இன்று நாம் செய்திருக்கிற நான்கு தீர்மானங்களும் மிகச்சிறந்தனவேயாகும். சில நண்பர்களுக்கு இன்னொரு தீர்மானத்தை இவைகளோடு கலந்தே செய்யலாமென்ற விருப்பமிருந்தது. அதாவது புலாலுண்பவர்களுக்கும் அது நியாயமில்லை யென்பதைத் தெரிவிக்க வேண்டுமென்பதாகும். சில அன்பர்கள் இப்போது முதலில் கொலைசெய்வதை நிறுத்தும்படி கேட்டுக்கொள்வோம்; மற்றவைகளை அடுத்த கூட்டங்களில் தீர்மானிக்கலாமென்று அபிப்பிராயப் பட்டார்கள். இது முதலாவது கூட்டமாகவிருப்பதால் அவ்விஷயங்களைப்பற்றி மறு கூட்டங்களில் பேசி முடிவுசெய்வோம். இந்தத் தீர்மானங்களால் சில வகுப்பினருக்கே சாதகமேற்படும். முயல், மீன், கதுவாலி, மான், புறா, உடும்பு, எலி, வாத்து, குருவிகள் முதலியவர்களுக்குத் துன்பமிருந்து வருவதுபோலவே ஆடு கோழிகட்கும் இன்னும் துன்பமிருந்து வருகிறது. ஆனால் ஆடு கோழிகட்கும் எருமை, பன்றி, பசு முதலிய மற்றுஞ் சிலருக்கும்

அதிகமான துன்பம் கொலைப்பலியாலுண்டாகியிருக்கிறபடியால் முதலில் கொலையை நிறுத்தவேண்டுமென்ற தீர்மானமே முக்கியமாகக் கருதப்பட்ட தென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. நாம் ஒற்றுமையாக இருந்து மற்ற நன்மைகளையும் அடைய முயலவேண்டும். மனிதர்களுக்கு ஒரு துன்பமும் நம்மாலுண்டாகாதபடியும் மேலும் மேலும் நம்மால் அவர்களுக்கு நன்மை யுண்டாகுமாறும் நாம் நடந்துகொள்ளவேண்டும். எல்லாவற்றிற்கும் கடவுள் திருவருள் முன்னிற்கட்டும் என்று தமது முடிப்புரையைப் பேசி முடித்தனர்.

கான்பரன்ஸின் காரியதரிசியாக மான்கன்றை நியமித்தார்கள். முதலாவது தீர்மானம் வாயுபகவானுக் கனுப்பப்பட்டு உலகத்திலுள்ள மனிதர்கள் யாவருக்கும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. இரண்டாவது தீர்மானம் பரமசிவன், மகாவிஷ்ணு, விநாயகர், முருகக்கடவுள், பிர்மா, தேவேந்திரன் முதலிய தேவர்கட்கு அனுப்பப்பெற்றது. மூன்றாவது தீர்மானம் ஐயனாருக்கும், மாகாளராகிய கறுப்பண்ணசாமிக்கும், காளியம்மனுக்கும் அனுப்பப்பட்டு மற்ற எல்லாக் கறுப்பண்ணர்களுக்கும் பேச்சிராக்காயி முதலிய பெண் தெய்வங்கட்கும் மற்றைய ஐயனாருக்குள் அடங்கிய சகல தேவதைகட்கும் சுற்றுக்கடிதம் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. நான்காவது தீர்மானம் உலகத்திலுள்ள பிரபல புராணிகர்களுக்கும் அனுப்பப்பட்டதுடன் ஸ்ரீசங்கர - ராமாநுஜ-மத்வ மடங்களுக்கும், தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள், திருக்கோவலூர், சிதம்பரம், கோவிலூர் முதலிய மடாலயங்கட்கும், ராமகிருஷ்ண மடங்கள், ஸ்ரீவிவேகாநந் தாச்ரமங்கள், ஸ்ரீலஸ்ரீ கருணையானந்த ஆச்ரமங்கள், சன்மார்க்க சங்கங்கள், மகாபிமான சங்கங்கள், ஜீவகாருண்ய சங்கங்கள், கிறிஸ்தவ சங்கங்கள், மகமதிய உலமாக்கள், தியாசபிகல் சங்கங்கள், ஆரிய சமாஜம், பிர்மசமாஜங்கள் முதலிய பல மதஸ்தாபன ஸ்தலங்கட்கும் பத்திராதிபர்கட்கும், நிருப நேயர்கட்கும் இன்னும் பல

வகைப்பட்ட மதப்பிரசாரகர்கட்கும் அனுப்பப்பட்டன. பிறகு காரியதரிசி யெழுந்து தங்கள் உத்தியோகத்தினின்றும் ஒய்வு எடுத்துக்கொண்டு பல பல உலகங்களிலிருந்து இங்கு விஜயஞ் செய்திருந்த பெரியார்கட்கும் ஏனையோருக்கும் வந்தனம் கூறினார். கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டு சபை மங்களகரமாக இரவு ஒன்பது மணிக்கு நிறைவெய்தியது.

(காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் துண்டுப் பிரசுரம்.)

---

உ

## பிள்ளையார் சுழி.

---

ஆகக் கோயிலில் அமரோங் கார
ஏகப் பொருளை இறைஞ்சுவம் யாமே.

(கருணையானந்த வள்ளல்)

பிள்ளையார்சுழி என்பது பரப்பிரம்மத்தினின்றும் உதயமான ஓங்கார ஸ்வரூபியாகிய கணேசப் பெருமானைக் குறிக்கும் ஓர் அடையாளம். எந்தக் காரியத்தையாவது எழுதப் புகும்போது எபபடி முஹம்மதியர்கள் பிஸ்மில்லா ஹிர்றஹ்மாநிர்றஹீம் என்றோ, அல்லது அதைக்குறிக்கும் 786 என்னுந் தொகையையோ குறிக்காமல் எழுதுவதில்லையோ, எப்படி சிறந்த தியானமாகிய பிஸ்மில்ல ஓதாமல் ஒரு காரியத்தையும் ஆரம்பிப்பதில்லையோ, அப்படியே ஹிந்துக்கள் எந்தக் காரியத்தையாவது எழுதப்புகுமுன் பிள்ளையார்சுழி போடாமல், பிள்ளையாரைத் துதிக்காமல், ஒரு காரியத்தையும் செய்யமாட்டார்கள்.

நமது முன்னோர்களால் எழுதப்பட்ட உபநிடதம், புராணம், இதிகாசம் முதலிய சகல ஞான லௌகிக நூல்களிலும், சாஸ்திரங்களிலும் பிள்ளையார்சுழி நாட்டப்பட்டிருக்கின்றது. நிருபங்கள் வரையும்போது முதல்முதல் தெய்வக்குறியான பிள்ளையார் சுழியை நாட்டிய பின்னரே எழுதத் தொடங்குவதும் தொன்றுதொட்டு வழக்கமாயிருக்கின்றது. இக்குறியை நாட்டுவதின் காரணத்தை சிறிது ஆராய்வாம்.

தெய்வத்தன்மை பொருந்திய பிள்ளையார் சுழியானது மூன்று பாகங்கள் கொண்டது. அவையாவன:—o, ⌒, —. முதல் பாகமாகிய o வட்டம் பரப்பிரம்மத்தைக் குறிக்கின்றது. வட்டத்திற்கு ஆரம்பமும் முடிவும் இல்லை. அதுபோல பரப்பிரம்மத்திற்கு ஆதியும் அந்தமும் இல்லை. இரண்டாவது பாகமாகிய ⌒ வளைவு ஓங்காரத்தின் பாகமாக இருத்தலால் அது ஓங்காரத்தைக் குறிக்கின்றது. மூன்றாவது பாகமாகிய—கோடு மாயையைக் குறிப்பிக்கின்றது. கோட்டிற்கு ஆரம்பமும் முடிவும் இருப்பதுபோல மாயைக்கும் தோற்றமும் ஒடுக்கமும் உண்டு. ஆகவே, வட்டத்தினின்று வளைவும், வளைவினின்று கோடும் தோன்றுவது போலவே, பரப்பிரம்மத்தினின்று ஓங்காரமும், ஓங்கார ஸ்வரூபியாகிய கணேசப் பெருமானிடமிருந்து மாயை என்னும் சக்தியும் தோன்றி, அவரிடமே லயமாகின்றது.

மேற்சொன்ன ரகசியமனைத்தையும் இந்த (உ) பிள்ளையார் சுழி என்னும் அடையாளமானது குறிப்பிக்கின்றது. இந்தக் குறியை நாட்டி எழுதப்படாத காரியத்திற்கு விக்னேசுவரராகிய விநாயகர் விக்னம் (இடையூறு) செய்வார் என்பது ஹிந்துக்களின் கொள்கை. விநாயகர் வாகனமாகிய விக்னஞ்செய்யுந் தொழிலையுடைய பெருச்சாளியே அவர் விக்னராஜர் என்பதைக் காண்பிக்கின்றது.

தேவர்களை வருத்திவந்த கொடிய அசுரனாகிய கஜமுகனைச் சங்காரஞ் செய்யும்பொருட்டு சிவபிரான் ஓங்காரத்தை எழுதினார். மும்மூர்த்திகளாலும், தேவர்களாலும், அசுரர்களாலும், நரர்களாலும், மிருகங்களாலும், ஆயுதங்களாலும் தனக்கு சாவு இல்லையென சிவபிரானிடமிருந்து கஜமுகன் வரம்பெற்றமையால், விநாயகர் யானைமுகமும், தேவர் கைகளும், பூதவயிறும், மனிதர் கால்களும் உடையவராய் அந்த ஓங்காரத்தினின்றும் பிரஸன்னமாகி கொம்பினால் கஜமுகன் மார்பைப்பிளந்து சங்கரிக்க, பரமசிவன் மனமகிழ்ந்து, மும்மூர்த்திகளாயினும், தேவர்

களாயினும், நரர்களாயினும், யாராயிருப்பினும், கணேசபிரானை நினையாமல் அவர்கள் செய்யும் காரியங்கள் விக்னமடையும் என்னும் வரத்தை அளித்தார்.

கஜமுகன் இறந்தமையால் தேவர்கள் அவன் கட்டளைப்படி அவனுக்குச் செய்துவந்த (தலையில் குட்டிக்கொள்ளுதல், இரு கைமாறிச் செவியைப்பிடித் திருகான் முடக்கிவிழுதல் என்னும் தோப்புக்கரணம் முதலிய) வணக்கங்களை, கஜமுகனைச் சங்கரித்த கணபதிக்குச்செய்ய அவைகளை கணபதி ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு யாதொரு விக்னங்களும் வாராமற் காத்துவருகிறார். அவ்வணக்கங்களை நாம் இன்னும் விநாயகருக்குச் செய்துவருகிறோம்.

(தலையிற் குட்டிக்கொள்வதால் சந்திரகலையிலுள்ள அமிர்தமானது கலங்கி சுழிமுனையின் வழியாக மூலாதாரத்திற்குச் சென்று கணபதிக்கு அபிஷேகமாகின்றமையால் அவ்வணக்கமானது அவருக்கு மிகவும் பிரியமானது.)

யானை மதம்பிடித்தால் ஒருவருக்கும் அடங்காததுபோல் பரப்பிரம்மமும், ஓங்காரஸ்வரூபிமுமாகிய கணபதி ஒன்றிலும் கட்டுப்படாதவர், என்பதை அவரது யானைமுகமும்; சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களையுடையவர் என்பதை அவரது ஐந்து கரங்களும்; பரப்பிரம்மம் அகண்டமாகையால் அண்டபிண்ட சராசரங்களனைத்தையும் தன்னுள் அடக்கியுள்ளவர் என்பதை அவரது பூதவயிறும்; ஞானசத்தி, கிரியாசத்தி உடையவரென்பதை அவரது இருகால்களும்; சத், சித், ஆனந்தமென்னும் சச்சிதானந்தமாகிய பூரணானந்தத்தை அடைய விரும்பினால் மாயையை அகற்றல் வேண்டுமென்பதை அவர் கரத்திலுள்ள தேங்காய், பருப்பு, வெல்லம் என்னும் பூரணத்தை மாவினால் மூடியுள்ள மோதகமும் குறிப்பிக்கின்றன.

திரிபுரதகனம் செய்தகாலத்திலே பரமசிவன் தன் காரியத்தை ஆரம்பிக்கும்போது (தான் விநாயகருக்குக் கொடுத்த

வரத்தை மறந்து) பிள்ளையாரைத் தியானிக்காத தோஷத்தினுல் சிவனது ரதத்தின் உருளை அச்சுமுறிந்து விக்னம் உண்டாயிற்று என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(சிவபிரானுக்கும் கணபதி விக்னஞ்செய்தபடியால் சிவபெருமானைவிட கணபதி பெரிய தெய்வமென்று கருதல் கூடாது. ஏனெனில் சத்தியும் சிவனும் சேர்ந்தே கணபதியாக ஓங்காரத்தில் அவதரித்தமையால் கணபதியே சிவம். சிவமே கணபதி.)

சிவபிரானைக் குறித்து கடுந்தவஞ்செய்து அவரிடமிருந்து சக்கராயுதத்தைப்பெற ஆனந்த மேலீட்டினுல் விநாயகரை நினையாமற் சென்றமையால் விஷ்ணுவிட மிருந்து அச்சக்கரத்தை வாங்கியுண்டார்.

மூவர்களேயும் தேவர்களேயும் யாவர்களேயும் மதியாது கர்வமே ஓர் உருவாய்க்கொண்ட இராவணனைப் பந்தாக ஆடினுர்.

சுந்தரமூர்த்தி நாயனுரும், சேரமான் பெருமானும் தங்களுக்காகவந்த புஷ்ப விமானத்திலேறி கைலைக்குச் செல்ல, ஒளவையாரும் அப்புஷ்ப விமானத்திலேறி கைலைக்குச் செல்ல எண்ணி, தாம் வழிபடும் கடவுளாகிய விநாயகரை விரைவுடன் பூசிக்க, அவர் கருத்தையறிந்த விக்னேசுவரர் தம்மை வழக்கப்படி மெதுவாகப் பூசிக்கும்படி ஒளவையாருக்குச் சொல்லி, பூசை முடிந்ததும், தமது துதிக்கையால் எடுப்பித்து, சுந்தரமூர்த்தி நாயனுரும், சேரமான்பெருமானும் கைலையடையு முன்னரே ஒளவையாரைக் கைலையில் சேர்த்தனரென்ருல் தம்மை வணங்காமற் செய்யப்படும் காரியங்களுக்கு கணபதி இடையூறு உண்டாக்குவார் என்பது தெள்ளிதிற் புலப்படும்.

ஆகையால் இத்தகைய பெருமைபொருந்திய பிள்ளையார் சுழியை ஆஸ்திகர்களில், நவீன நாகரீக சாகரத்தில் ஆங்கிலமென்னும் புணைகொண்டு நீந்தும் மேதாவிகள், தாம் செய்ய ஆரம்பிக்கும் நற்காரியங்கள் விக்னமின்றி இனிது முடியுமாறு இத்தெய்வக்குறியை அலக்ஷியஞ்செய்யாது முதன்முதல் பதிவு

செய்து தங்கள் காரியங்கள் இனிதுமுடிந்து இன்புறுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றனம்.

அத்தி முகனடி நித்த நினைபவர்
சித்தி திருவொடு முத்தி பெறுவரே.

V. K. மூர்த்தி, விளமல்.

---

## தமிழ்.

(143-ம் பக்கத் தொடர்ச்சி.)

எனவே, ஸ்ரீராமன் காலத்திற்கு முன்னர், பரசுராமன் க்ஷத்திரியர் குலத்தை வேரறுக்கவேண்டி திரிந்துவர, அக்காலத்தே காவிரிப்பூம் பட்டினத்தை அரசாண்ட காந்தமன்னவன் என்பான்பால் ஓர் கன்னிவந்து, "பரசுராமனோடு போர்புரியற்க, மறைதி" என்றவே அவன், அந்நகரைக் காக்கவேண்டி கணிகைக்காதலனாகிய ககந்தன் என்பவன்பால் அரசியலைக் கொடுத்துவிட்டு அகத்தியன்பால் அபயம்புக்கு வேண்டாநிற்ப, இம்மன்னன் பொருட்டே அகத்தியன் தன் கைக்கரகங் கவிழ்த்துக் காவிரியளித்தனன் என்பது தெரிதலினால் காவிரியுண்டான காலத்திற்கு முன்னமும் ராமன் காலத்திற்கு முன்னமும் அகத்தியர் தென்திசைக்கட்போந்து தமிழ் விருத்திசெய்தமை நன்கு விளங்கும். தென்திசைக்கண் அகத்தியனார் போந்தகாலம் இன்னதென வரையறுக்கக் கூடிலதாயினும், பார்ப்பதியாரின் மணவினை நிகழ்ந்த காலத்துப் பெருமான் கட்டளையால் போந்தார் என கந்தபுராணமும், கச்சிபுராணமும் கூறுதலால், சூரபதுமன் தீச்செயல்களுக் காற்றாது பரமன் தன் நுதல் விழியுமிழுங்கனலால் குமாரக்கடவுளைத் தந்தனராகையால், சூரபதுமன், முருகவேள் காலத்திற்கு முன்னரும், வாரிநீர் உண்டகாலத்திற்கு முன்னரும் நம் அகத்தியனார் நிலவியிருந்தார் என்பது தெரிதலின் வெகுகாலத்திற்கு முன்னரேயே இருந்தார் என்பது பெறப்படுகின்றது.

தமிழ் நாடு:—இம்மொழி வழங்கும் நாட்டிற்குத் தமிழ்நாடு என்பர் புலவோர். அவைகள்:—பாண்டியநாடு, சோழநாடு, சேர

நாடு, நடுநாடு, தொண்டைநாடு, என்பனவே. இவைகளில் முக்கியமாக வழங்கப்படுதலான முத்தமிழ்நாடுகளாகிய சேர, சோழ, பாண்டி நாடுகளில் சோழநாட்டை நன்னூல் உரை மேற்கோளாசிரியர் கொடுந்தமிழ் நாட்டில் ஒன்றாகச் சேர்த்து,

"தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றியருவா அதன் வடக்கு—நன்றாய
சீதம் மலாடு புன்னாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநா டெண்"

எனக் கூறியிருப்பினும், சேர சோழ பாண்டிநாட்டுச் சரிதைகளானும், தமிழ்ப் பாவலர் தமிழ்க் கவிவாணரைப் போற்றிக் கூறிய பாக்களானும்,

"செந்தமிழ் மொழியை செல்வர்கூட் டுண்ண
நந்தவில் நூல்கள் நலம்பெற வருளிய
நடுசீர் மையின்எம் நரைமூ தாட்டி
தொடுசீர் வரைப்பிற் சோறுடைத் தென்னும்
தொல்சீர் பரவிய சோணாட் டின்கண்."

என நம் ஔவைப்பிராட்டி கூறியிருத்தலினாலும், செந்தமிழ் வழங்கிய நாடெனவே கொள்ளலாம். பின்னும் நன்னூல் சிறப்புப்பாயிரத்தில்,

"குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்"

எனவும் கூறியிருத்தலின் இதன் எல்லைகட்குள்ளேயே அகப்பட்டிருத்தலினும் தீர்மானிக்கலாம். நிற்க, நாம் இதுபோழ்து அக்காலத்தே தமிழ் நாட்டின்,

"வடவேங் கடந்தென் குமரி யாயிடைத்
தமிழ் கூறு நல்லுல கத்து."

என்ற எல்லைக்குள் எத்தனை நாடுகளிருந்தன வென்பதையும், அவைகளின் சில முக்கிய விஷயங்களைப்பற்றியும் கவனிப்பாம். இத்தெக்கண தேயமானது இதுபொழுது ராஜதானியாகவும், அதற்குள் ஜில்லாக்களுமாகப் பிரிக்கப் பட்டிருப்பதுபோல, ஆங்கிலேய மகம்மதிய படையெழுச்சிகளுக்கு முன்னர் பற்பல

நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவைகளில் முக்கியமானவைகளாவன:–1. தொண்டைநாடு, 2. தெலுங்குநாடு, 3. துளுவநாடு, 4. கொங்குநாடு, 5. மத்தியநாடு, 6. பாண்டியநாடு, 7. சேரநாடு, 8. சோழநாடு, 9. ஈழநாடு என்பவைகள் ஆகும். இவைகளில் முக்கியத்தை ஆராய்வாம்.

1. தொண்டைநாடு; – இதனைத் தொண்டைமண்டலம் என்பர். கிழக்கே கடலும், மேற்கே பவளமலையும், வடக்கே திருவேங்கடமும், தெற்கே பினாகி நதியும் எல்லையாக வுடையது. இதற்குத் தலைநகர் திருவகம்பம் என்னும் காஞ்சிபுரம் ஆகும். தொண்டைமான் அரசர்களால் ஆளப்பட்டு வந்தமையின் தொண்டைநாடெனப் பெயர்பெற்றது. இந்நாட்டில், திருவள்ளுவர், கம்பர், பரிமேலழகர், ஒட்டக்கூத்தர், சேக்கிழார், அருணகிரிநாதர், பவணந்தி முனிவர், இரட்டையர், படிக்காசுப் புலவர், இராமாநுஜாசாரியார், வேதாந்த தேசிகர், அப்பைய தீக்ஷிதர் முதலியோர் விளங்கிவந்தனர். மற்றும் சிவனடியார்களில் திருக்குறிப்புத் தொண்டர் பிறப்பிடமாகிய தொண்டை நாட்டைப் புகழ்கையில், சேக்கிழார்.

> நன்மைநீடிய நடுநிலை யொழுக்கத்து நயந்த
> தன்மைமேவிய தலைமைசால் பெருங்குடி தழைப்ப
> வன்மையோங் கெயில்வளம் பதிபயின்றது வரம்பில்
> தொன்மை மேன்மையின் நிகழ்பெருந் தொண்டைநன்னாடு.
>
> செக்கர் வார்சடைச் சிவபிரான் திருவருள்செய்யத்
> தக்கவாய்மையி னுயிர்க் கெலாந் தன்னிடத்திருந்து
> மைக்கணெம் பெருமாட்டியெண் ணான்கறம் வளர்க்கும்
> தொக்கமாப்புகழ் படைத்தது தொண்டை நன்னாடு.
>
> பவம்விளைத் திடாப்பெரும் பதியெனத் திசைபோய்
> சிவம்விளைத்திடு நகரங்க ளேழுஞ் சிறந்து
> தவம்விளைத்திடு காஞ்சியைத் தன்னிடத் திருத்தி
> நவம்விளைத் திடும்பெருமை பூண்டது தொண்டைநாடு.

எந்நாட்டுப் பெருவளமு மெவ்வவர்கோட் பாடுகளு
மியம்ப வல்ல
பொந்நாட்டுப் பொன்செருக்கும் பன்னுக்குப் பணிசெருக்கும்
போக்கு மிந்த

நன்னாட்டைப் புலவரெலாந் தொண்டைநாடு எனவுரைப்பர்
ஞால மங்கை
தன்னாட்போ தனையமுகக் கனிவாயாங் காரணத்தின்
சாற்பார் போலும்.

என்று திராவிட மகாபாடீய கர்த்தாவாலும் புகழப்பெற்றது.

தெலுங்கு நாடு:—இதனை ஆந்திரநாடென்பர். தெலுங்கு பாஷைப்பேசும் ஆந்திரஜாதியார் குடியேறிய நாடாதலின் அப் பெயர் பெற்றது. இந்நாட்டில், வேமன்னர், வித்பாரண்ணியர், சயனுச்சாரியார் முதலிய வித்வ சிரோன்மணிகள் விளங்கி வந்தனர். இந்நாட்டில், அஹோபிலம், ஸ்ரீசைலம், பத்ராசலம், பம்பாதீர்த்தம் முதலிய ஸ்தலங்களும் தீர்த்தங்களுமுள. இந் நாட்டை விஜயநகரத்தரசர்கள் ஆண்டுவந்தனர்.

(இன்னும் வரும்)

R. S. சாம்பசிவ சர்மன். (தமிழ்ப் பண்டிதன்)

---

## வருண தரும விளக்கம்.

(144-ம் பக்கத் தொடர்ச்சி.)

"கொல்லாமை ஒன்று இருப்பின் அது எல்லா நன்மைகளையுங் கொடுக்கும். ஏனெனில் அது இன்மையால் உண்டான கோரம், பக்ஷபாதம், கல்லாமை, அகந்தை, மனக்குற்றம், அறியாமை, வீணர்சேர்க்கை, வீண்முயற்சி, வாஞ்சை முதலிய தீங்குகள் எத்தனை என்பேன். உனக்கடிமையான நான் இவைகடரும் அடிமையோ" என்னும் கருத்தையமைத்து,

**தாயுமானவள்ளல்.**

கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்குமக்
குணமொன்று மொன்றிலேன்பால்
கோரமெத் தனைபக்ஷ பாதமெத் தனைவன்
குணங்களெத் தனைகொடியபாழ்ங்
கல்லாமை யெத்தனை யகந்தையெத் தனைமனக்
கள்ளமெத் தனையுள்ளசற்

காரியஞ் சொல்லிடினு மறியாமை யெத்தனை
    கதிக்கென் றமைத்தவருளில்
செல்லாமை யெத்தனை விர்தாகோஷ்டி யென்னிலோ
    செல்வதெத் தனைமுயற்சி
சிந்தையெத் தனைசலன மிந்த்ரஜா லம்போன்ற
    தேகத்தில் வாஞ்சைமுதலா
அல்லாமை யெத்தனை யமைத்தனை யுனக்கடிமை
    யானே னிவைக்குமாளோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
    யானந்த மானபரமே.

என்று திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர்.

மேற்சொல்லியவைகளில் எவராயிருப்பினும் கொலை புலைகள் புரிபவர்கள் அந்தணர் (மேலான சாதியர்) ஆகார் என்பது தெள்ளிதிற் புலப்படும்.

எச்சில், தீட்டு, சுசிகரம் என்பது நீசர்களிடத்தில் கொஞ்சமேனும் கிடையாது. சத்திரிய, வைசிய, சூத்திரர்களிடத்தில் ஆசாரமும் சுசிகாமும் உண்டு. பிராம்மணர்களிடத்தில் மிக மேலான சுசிகாமும் ஆசாரமும் உண்டு. ஆனால், ஆசாரம் தவறி நடக்கும் பிராமணர்களைப்பற்றி இங்ஙனம் சொல்லப்படவில்லை. உத்தம பிராமணர்கள் நீசர்கள் சமீபத்தில் செல்லமாட்டார்கள். நீசர்கள் நிழலைக்கூட மிதிக்கமாட்டார்கள். நீசர்கள் தொட்ட பதார்த்தத்தை மேலான சாதியார் சாப்பிடக்கூடாதெனத் தள்ளுவதின் காரணத்தைச் சிறிது ஆருய்வாம்.

நம்முடைய தேகத்தில் தேஜஸ் என்ற ஓர் பதார்த்தமிருக்கின்றது. அதற்குத் தமிழில் நெறியென்றும், ஸம்ஸ்கிருதத்தில் தேஜஸ் என்றும், இங்கிலீஷில் ஆரு (Aura) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பாத்திரத்தில் நிறைய ஜலம்பெய்து அதில் விரல்களை ஒரு அங்குலம் நனைத்துக்கொண்டு மனதினுல் தேகத்திலிருக்கிற தேஜஸைத் தள்ளி நகக்கண் வழியாய் விழுவதாய்ப் பாவனை செய்துகொண்டிருந்தால் தேகத்திலிருக்கிற தேஜஸ் சிலநேரத்தில் நீரில் இறங்கும். இதனை எறும்பூறுவது

போல் பரிசத்தால் தெரிந்துகொள்ளலாம். அந்த தேஜஸ் சம்பந்தப்பட்ட ஜலத்தை வயிறெடுப்பு முதலிய வியாதிக்குக் கொடுத்தால் உடனே சௌக்கியமாகும். ஒருநாளைப்போல் பத்து நாளைக்கு மந்திரித்தால் தேகத்திலிருக்கின்ற தேஜஸ் எல்லாம் போய் பலஹீனமாகும். பால், தயிர், நெய் முதலியவைகளைச் சேர்த்துக்கொண்டால் தைரியமாய் மந்திரிக்கலாம். நாம் சாப்பிடும் ஆகாரமே தேஜஸாய் மாறுகிறதேயொழிய வேறல்ல.

ஞானிகள் தபசிகளுக்கு அந்த தேஜஸ் சோதிசொரூபமாகவும், பாபபுண்ணியம் இரண்டை செய்கின்ற தபசிகளுக்கு கறுப்பும் வெளுப்பும் கலந்த நிறமாகவும், சுத்தப் பாவிகளுக்கு கறுப்பு நிறமுள்ளதாகவும், அந்த தேஜஸ் தேகத்தைச் சுற்றி ஒருமுழத்தில் பரவிசிற்குமென்பது ஞானிகளுக்குச் சம்மதம், நம்மாழ்வார் சரித்திரமே இதற்குப்போதுமான சான்று பகரும்.

கர்மரோக முடையவர்கள் சமீபத்தில் போகலாகாதெனக் கூறுவது அதற்குத்தான். தேள்கொட்டினால் விஷத்தைக் கண்டவுடன் தேஜஸ் ஒருபக்கத்தில் கட்டிக்கொள்ளுகிறது. அதைத்தான் நெறி கட்டிக்கொள்ளுகிறதென்று சொல்வது.

வெள்ளைக்காரர்கள் இந்த சாஸ்திரத்தைக் கண்டுபிடித்து அனுபவத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த சாஸ்திரத்திற்கு மெஸ்மெரிசம் என்று சொல்வது.

இந்துக்கள் கைக்கொண்டுவரும் சாதியாசார மென்பது மெஸ்மெரிசம் (Mesmerism) என்ற சாஸ்திரத்தைக் கொண்டு பார்க்கும்போது பெரும் நன்மையைத் தரத்தக்கதென்று கர்னல் ஆல்காட்துரை நாகப்பட்டணத்தில் பிர்ம்மஞானசபை ஸ்தாபித்தபோது தான்செய்த பிரசங்கத்தில் விஸ்தாரமாய் சொல்லியிருக்கிறார். அப்போது வெளிவந்த (South Indian Post) என்ற பேப்பரில் இது பிரசுரமாயிருக்கின்றது.

(இன்னும் வரும்)

விளமல் சேஷாத்திரி.

புலிவலம் ஸ்ரீ தெண்டாயுதபாணிக் கடவுள்மீது
மணிமுத்துநாயகம் என்னும் காரணப்பெயர் புனைந்த
ஞானபூபதி, ஸ்ரீ கருணையானந்த சுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய

# திருப்பாவணி என்னும்

# கந்தப்புகழ்.

இதில் நவீன நாகரீக பார்ஸி வர்னமெட்டுகளமைந்த இராக தாளங்களுடன் பரமானந்தத்தைத் தரும் கீர்த்தனங்கள், தேகப் பரவசஞ்செய்யும் பல்லவிகள், கல்மனமும் கரைந்துருகக்கூடிய அநு பல்லவிகள், பக்திரசக்கடலைப்புகட்டி ஆனந்தபாஷ்பம் சொரியச்செய் யும் சரணங்கள், கெம்பீரமும் சோகரசமும் பொருந்திய ஜாவளிகள், சொற்சுவை பொருட்சுவை நிறைந்து ததும்பி வாசிப்போர் உள்ளத்தை கொள்ளைகொண்டு என்ன வாக்கு! என்ன அருமை! என்று வியக்கும் படியான விருத்தங்கள் முதலியவை நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு பாடலையும் பாடுபவரும் கேட்பவர்களும் திடுக்கிட்டு அதிசயித்து மயிர் கூச்சலடைந்து ஆஹா! ஆஹா!! பலே! பேஷ்! என்று சிரக்கம்பம் கரக்கம்பம் கொண்டு மெய்மறந்து பத்தி முத்தி அடையக் கூடிய விதமாக அமைந்துள்ளது.

முதற்பாகம் அணா 0—2—0 2-ம்பாகம் அணா 0—2—0
முருகர் தியானம் அணா 1 வேதாந்தபாஸ்கரன் ரூ. 1.

கருணாநிதி

# ஜீவகாந்த தீர்த்தம்.

இந்தத் தீர்த்தமானது சாதாரணமாய் ஆறு, குளம், ஏரி, கிணறு முதலியவைகளில் உள்ளதல்ல. நமது ஆன்றோர்கள் அனுபவித்து கையாண்டுவந்த முறைப்படி தை மாசி முதலான காலங்களில் பெய்யும் பனிநீரை பளிங்குப்பாத்திரங்களில் வாங்கி அதில் ஒரு மண்டலம்வரை மெஸ்மெரிஸ சக்தியால் ஜீவகாந்தப் பவ்வரைச் செலுத்தி ஜுரம், வயிற்றுவலி முதலிய எல்லாவியாதிகட்கும் பரமசஞ்சீவியாகத் தயாரிக்கப்பெற்றுள்ளது. வியாதிக்குத்தக்கபடி அவ்வப்போது மெஸ் மெரிசம் செய்து அனுப்பப்பெறும். பாலர் முதல் விருத்தர் வரையில் உபயோகிக்கலாம் எவ்வித பத்தியமும் கிடையாது. ஜீவகாருண் யத்தை முன்னிட்டே குறைந்த விலை ஏற்படுத்தலாயிற்று.

2 அவுன்சுபாட்டில் 1-க்கு 0—8—0
டஜன் ஒன்றுக்கு 5—0—0
காலரா மாத்திரை பாட்டில் 1-க்கு 0—3—0

விலாசம் :—

மானேஜர்,

கருணாநிதி வர்த்தக சாலை,
ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர். S. I. Ry.

# ஜனங்களே! இன்னுமா தூங்குகிறீர்கள்?

## வேதாந்த பாஸ்கரன்

என்னும் நமது மெய்ஞ்ஞான சூரியன் உதயமான பின்னரும் தூங்குவது

ஞாயமா! ஞாயமா!!

அஞ்ஞான நித்திரை நீங்கி! மெய்ஞ்ஞான விழிப்படையுங்கள்!!

இவ்வுலகின்கண் ஆத்மலாபம் அடைய அனேக பக்குவிகள் எண்ணியும் (தூணைக் கட்டிப்பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்குதே! விடமாட்டேனென்குதே!! என ஓலமிடுபவரைப்போல்) பிரபஞ்சவாழ்க்கையில் அதிகமாக மனதை நுழைத்துக்கொண்டு ஐயோ! பிரபஞ்சம் விடமாட்டேனென்குதே? என்று வருந்துகின்றனர். தூணை நாம் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்கிறோமா? தூண் நம்மைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறதா? என்றறிந்தவர் சிலரே. ஆதலின் காட்டிலிருப்பினும் நாட்டிலிருப்பினும் கமல நீர்போல் பற்றற்றிருக்க வேண்டுமேயன்றி, மலை, குகை, முதலானவைகளில் வசிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை

மரணமாவதோ இன்ன நேரமென்று காணுவது அசாத்தியமாயிருக்கிறது அறுப்பதற்கு கத்தி தீட்டுகிறபோதும் ஆடு அசைபோடுவதுபோல் காலமெல்லாம் கதை, காவியம, பகடி, பரிகாசவேடிக்கை விளையாட்டுகளில் பொழுதைப் போக்கிவிட்டு சாகப்போகிறகாலத்தில் சங்கரா! சங்கரா!! என்று பிதற்றுவதிற் பயனில்லை என்பதை ஆலோசித்து ஆத்மலாபம் பெற முயலுங்கள்.

தேன்வண்டானது தானும் தேனையுண்ணாமல் தேனை எடுக்க வருபவரையுங் கொட்டுகிற தன்மைபோல் இவ்வுலக வாழ்வையே சதமென நினைந்து, நீங்கள் ஆத்மலாபம்பெற முயலாவிடினும் முயற்சிப்பவர்களை தடுக்காதிருங்கள். ஆத்மானுசந்தானம் பெறுவதற்கு அருமை பெருமைவாய்ந்த நமது **வேதாந்த பாஸ்கரன்** ஓர் சிறந்த வழிகாட்டியாகும், ஏனெனில் சிலர் எழுதிய சரடு முரடான வசன நடைகளைப்போலின்றி நளினமான இனிய செந்தமிழ் வசன நடையில் பன்னூற்களிலிருந்தும், மேற்கோள் தீட்டி மிக அழகாயும், சமரசமாயும் எழுதப்பெற்றிருப்பதால் முஹம்மதியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லாமதஸ்தர்களும் வாங்கி வாசிக்கற்பாலதே. இந்நூலை வாசிக்காதவர்கள் வாஸ்தவத்தில் துர்ப்பாக்கியர்களே! தமிழ்க்கல்வி குன்றிய இக்காலத்தில் இத்தகைய நூல் வெளி வந்துலாவுவதானது தமிழ் நாட்டுக்கு எதிர்பாராத ஓர் பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன் விலை ரூ. 1—0—0

யோக ரகசியம் (ஒருபாகம்) விலை அணா 0—6—0

விலாசம்:—மானேஜர், கருணாநிதி வர்த்தகசாலை, ஞானசூரியன் ஆபீஸ், விஜயபுரம்—திருவாரூர். S. I. Ry.

PRINTED AND PUBLISHED BY SWAMI KARUNAIYANANDA
at the KARUNANITHI PRESS, VIJAYAPURAM.